இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 29-10-2024

# பழனிசாமியின் ஊழல்கள்

ஊழல்கள் பற்றி பேசத் தொடங்கி இருக்கிறார் அ.தி.மு.க.வின் பழனிசாமி. அதற்கான அருகதை அவருக்கு இருக்கிறதா என்றால் இல்லை!

**பழனிசாமி மீது அவர் முதலமைச்சராக இருந்தபோதே டெண்டர் வழக்கு பாய்ந்தது. உடனடியாக உச்சநீதிமன்றம் போய் தடை வாங்கினார். யோக்கியர் என்றால், அந்த வழக்கை முறையாக நடத்தி இருக்க வேண்டும். ஆனால் பதற்றமாகி உச்சநீதிமன்றம் போனார். இடைக்காலத் தடை வாங்கினார். அதனால் தான் முதலமைச்சர் பதவியில் தொடர்ந்து நீடித்தார். "உங்கள் மீது ஊழல் புகார் சொல்லப்படுகிறதே?" என்று நிருபர்கள் டெல்லியில் வைத்து அவரிடம் கேட்டார்கள். "யார் மீது தான் ஊழல் புகார் இல்லை" என்று சொன்னவர் தான் பழனிசாமி. அவருக்கு ஊழலைப் பற்றி பேச அருகதை இருக்கிறதா?**

தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைப் பணிகளை மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்ட டெண்டர் ஒப்பந்தத்தில் சுமார் 4,800 கோடி ரூபாய் முறைகேடு நடைபெற்றாகவும் இது குறித்து பழனிசாமி மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தகோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி 2018 ஆம் ஆண்டே வழக்கு தாக்கல் செய்தார். இவைகளை தனது உறவினர்களுக்கே டெண்டராகக் கொடுத்துக் கொண்டார் பழனிசாமி என்பதுதான் குற்றச்சாட்டு. இதன் மூலம் பழனிச்சாமி, தனது நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் பதவியையும், முதலமைச்சர் பதவியையும் தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என ஆர்.எஸ்.பாரதி மனுவில் தெரிவித்து இருந்தார்.

வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி 2018 அக்டோபர் மாதம் உத்தரவிட்டது. சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து பழனிசாமி தரப்பில் உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. உச்சநீதிமன்றம் சி.பி.ஐ. விசாரணைக்கு இடைக்கால தடைவிதித்தது. அந்த வழக்கு அப்படியே கிடந்தது.

ஆட்சி மாறியது, காட்சியும் மாறியது. தமிழக அரசு தரப்பில் வழக்கை விரைந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா அமர்வில் தமிழ்நாடு அரசு சார்பில் முறையிடப்பட்டது. **"இவ்வழக்கு கடந்த நான்கு ஆண்டு காலமாக உச்சநீதிமன்றத்தின் விசாரணைக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கின் விசாரணை எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கை உச்சநீதிமன்றம் விரைந்து விசாரிக்க வேண்டும்"** என முறையிட்டது. இதனை ஏற்றுக் கொண்ட உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி என்.வி. ரமணா விரைந்து விசாரிக்க உத்தரவிட்டார். அதன்படி, சென்னை உயர்நீதிமன்றமே விசாரிக்கலாம் என்று உத்தரவிட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், இந்த வழக்கு மீண்டும் வேகம் எடுத்தது. தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறையே இப்போது விசாரணை நடத்தி வருகிறது. இத்தகைய பழனிசாமிதான் ஊழல்கள் குறித்து வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார்.

பழனிசாமியின் ஆட்சியே குட்கா ஆட்சி தான் என்பது அனைவருக்கும் தெரியும்.

சென்னையில் சட்டவிரோதமாக தடை செய்யப்பட்ட குட்கா பொருள்களை விற்பனை செய்ய அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், ஐ.பி.எஸ். அதிகாரிகள், வணிக வரித்துறை அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு லஞ்சம் தரப்பட்டதாக 2017-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் குற்றச்சாட்டு எழுந்தது. குட்கா வியாபாரிகளிடம் வருமான வரித்துறை விசாரணை நடத்துகிறது. அப்போது தங்களது வியாபாரத்துக்கு துணை நின்றவர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் யார் யார் என்பதை டைரி எழுதி வைத்திருந்தார்கள் வியாபாரிகள். **அந்த நிறுவனத்தில் இருந்து 40 கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்பட்டுள்ளது அ.தி.மு.க. ஆட்சியில்.**

இது தொடர்பான வழக்கில் மத்திய கலால் வரித்துறை தாக்கல் செய்த பதிலில், **"டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஏராளமான குட்கா பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை விற்பதற்காக 55 கோடி வரை ஹவாலா முறையில் பணபரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது"** என்று கூறப்பட்டு இருந்தது. வருமான வரித்துறையும் இதனை வலிமைப்படுத்துவது மாதிரியான ஆதாரங்களைக் கொடுத்தது. தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, அப்துல் குத்தூஸ் அமர்வு, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது.

40 கோடிக்கு மேல் லஞ்சம் பெற்றது தொடர்பாக வருமான வரித்துறை அ.தி.மு.க. ஆட்சியில் தலைமைச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியது. அதில் அ.தி.மு.க. ஆட்சி காலத்து அமைச்சரான விஜயபாஸ்கர், இரு டி.ஜி.பி.க்கள் பெயர்கள் இருந்தன. ஆனால் லஞ்ச ஒழிப்புத் துறையின் முதல் தகவல் அறிக்கையில் இவர்கள் பெயர் இடம் பெறாத வகையில் பழனிசாமி இவர்களை காப்பாற்றினார். **சில ஊழியர்களை மாட்டி விட்டு அ.தி.மு.க. அமைச்சர்களை தப்பிக்க வைத்தார் பழனிசாமி.**

**அ.தி.மு.க. அமைச்சர் லஞ்சம் பெற்றதற்கான ஆதாரங்கள் கொண்ட ஒரு கோப்பு ஒன்றை வருமான வரித்துறை அனுப்பி இருந்தது. அந்த ஆவணங்களையே காணாமல் ஆக்கினார்கள் பழனிசாமி ஆட்சியில்.**

குட்கா வழக்கை விசாரித்த லஞ்ச ஊழல் தடுப்புத்துறை கூடுதல் டி.ஜி.பி. மஞ்சுநாதா திடீரென்று மாற்றப்பட்டார். அவர் இருந்தால் இந்த வழக்கை முறையாக நடத்தி விடுவார் என்று பயந்து தூக்கி அடித்தார் பழனிசாமி.

உயர் நீதிமன்ற ஆணையின்படி விஜிலென்ஸ் ஆணையராக நியமிக்கப்பட்டு - குட்கா வழக்கை விசாரித்து வந்த வி.கே. ஜெயக்கொடி ஐ.ஏ.எஸ். 5 மாதங்களில் பழனிசாமியால் மாற்றப்பட்டார்.

குட்கா வழக்கில் தொடர்புடைய சிவக்குமார், செந்தில்முருகன் - ஆகிய இரண்டு அரசு ஊழியர்கள் மீது 'வழக்குத் தொடர' சி.பி.ஐ. அனுமதி கோரியது. அதற்கு பழனிசாமி அரசு அனுமதி தரவில்லை. திரும்பத் திரும்ப கேட்ட பிறகு 20 மாதங்கள் கழித்து அனுமதி அளித்தார் பழனிசாமி.

அமைச்சர் விஜயபாஸ்கர், முன்னாள் டி.ஜி.பி. டி.கே.ராஜேந்திரன் உள்ளிட்டவர்கள் மீதான நடவடிக்கைக்கு பழனிசாமி இறுதிவரை அனுமதி தரவே இல்லை.

**எந்த அதிகாரிகள் மீது புகார் எழுந்ததோ, அவருக்கே பணி நீட்டிப்பு தரப்பட்டது** பழனிசாமி ஆட்சியில். தன் மீதான குற்றச்சாட்டுக்கு பரிகாரம் தேட வழக்கு போட அவருக்கே அனுமதியும் தரப்பட்டது. பழனிசாமி ஆட்சியில் குட்கா மட்டுமல்ல, ஊழலும் தலைவிரித்தாடிய காட்சிகள் ஆகும். இந்த வழக்கு சி.பி.ஐ. நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

**இதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து பேசத் தொடங்கி இருக்கிறார் பழனிசாமி.**



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நியூயார்க்கில் நடக்கவிருக்கும் ஐ.நா. சபை கூட்டத்தில் நாடாளுமன்ற குழுவின் சார்பில் அமெரிக்கா செல்ல இருக்கின்ற மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா நேற்று முன்தினம் (27.10.2024) சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## சோ.துரைபாண்டியன் தலைமை! ஆர்.குமரேசன் முன்னிலை!

# கோவை - கவுண்டம்பாளையம் 35வது வார்டில் தூய்மை பணியாளர்களுக்கு நல உதவிகள்!

### மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் ஏற்பாட்டில் வழங்கல்!

*கோவை, அக். 29 -*

*கோவை வடக்கு மாவட்டத்தில் கவுண்டம் பாளையம் பகுதியில் 35 வது வார்டில் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களுடைய ஆலோசனையின் பேரிலும் மாவட்டச் செயலாளர் தொ.ஆ.ரவி ஒத்துழைப்புடனும், இங்கே பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் சுமார் நூறு பேருக்கு மேல் உள்ள ஆண் - பெண் பாலாருக்கு, வேட்டி சட்டை, சேலைகள் எனவும், தீபாவளி செலவுக்கான பணம் முடிப்பும், 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் சம்பத் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.*

*35 வது வட்டக் கழக அவைத் தலைவர் சோ. துரைப்பாண்டியன் தலைமையில், வட்டக் கழக செயலாளர் ஆர்.குமரேசன் முன்னிலையில், சிறப்பு விருந்தினராக முன்னாள் கவுண்டம்பாளையம் பகுதிச் செயலாளர் மதியழகன் மற்றும் மூத்த முன்னோடி பாலசுப்ரமணியம் ஆகியோர் கலந்து கொண்ட, இந்நிகழ்வில் மாநகராட்சியின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ள இந் நல உதவிகள் வழங்கும் நிகழ்வானது சிறப்புற அமையப்பெற்றது.*

*தொடர்ந்து எந்த வித எதிர்பார்ப்பும் இன்றி, தன்னலம் இன்றி, பொதுமக்களின் நலன் கருதி அதிகாலையில் இருந்தே செயல்படும் தூய்மை பணியாளர்கள், மற்றும் அவர்களுடன் இணைந்து பணியாற்றும் மேற்பார்வையாளர், காண்ட்ராக்டர் ஆகியோருக்கு உரிய மரியாதையும் தீபாவளியை கொண்டாட, அவர்களுக்கான செலவினங்களை தன் பொறுப்பில் ஏற்று செய்த, மாமன்ற உறுப்பினர் சம்பத்தை பொதுமக்கள், பெரிதும் போற்றி மகிழ்ந்தனர்.*



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2024) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி அவர்களின் மகள் டாக்டர் ஏ.கே.எஸ். தாரணி – டாக்டர் எம்.பரத் கௌசிக் ஆகியோரது ஆண் குழந்தைக்கு "திராவிடன்" என்று பெயர் சூட்டினார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.

## சென்னை - பெசன்ட் நகர் கடற்கரையில் - ரூ 1.61 கோடி மதிப்பில்

# மாற்றுத் திறனாளிகளுக்கு - சிறப்பு மரப்பலகைப் பாதை அமைக்கும் பணி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார்! மாற்றுத் திறனாளிகளுடன் கலந்துரையாடினார்!





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2024) சென்னை, பெசன்ட் நகர் கடற்கரை மணல் பரப்பில் ரூ.1.61 கோடி மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு, மரப்பலகைகளை கொண்டு அணுகு பாதை அமைக்கும் பணியினை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**சென்னை, அக்.29-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்காக பிரத்யேக மரப்பலகை பாதை அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, மாற்றுத்திறனாளிகளுடன் கலந்துரையாடினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2024) சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்காக பிரத்யேக மரப்பலகை பாதை அமைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, மாற்றுத்திறனாளிகளுடன் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வின்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: -

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகின்றதோ, அப்போதெல்லாம் மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் ஒளியேற்றும் விதமாக பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பாக விடியல் பயணம் திட்டத்தை அறிவிக்கும் போது அதில் மாற்றுத்திறனாளிகளும் பயன் பெறும் வகையில் கட்டணமில்லாமல் அரசு பேருந்துகளில் பயணிக்கலாம் என்று உத்தரவிட்டிருந்தார்கள். அதேபோல் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகை ரூ.1000 மாக இருந்ததை ரூ.1,500 என்று உயர்த்தி வழங்கி வருகின்றார்கள்.

சட்டமன்றத்தில் என்னுடைய முதல் பேச்சிலேயே மாற்றுத்திறனாளிகள் உரிமைக்காக குரல் கொடுத்திருந்தேன். இப்படி கழகமும், கழக அரசும் என்றைக்கும் மாற்றுத்திறனாளின் நலனுக்காக தொடர்ந்து உழைத்து வருகின்றது.

குறிப்பாக சென்னை மெரினா கடற்கரையில் மாற்றுத்திறனாளிகள் சிரமம் ஏதுமின்றி கடலை ரசிக்க வேண்டும். கடல் அலையில் தங்களுடைய கால்களை நனைக்க வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக பாதையை உருவாக்கித் தந்தார்கள்.

225 மீட்டர் தூரத்திற்கு சென்ற 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக பாதை திறக்கப்பட்து. 1 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அந்த பாதையில் இன்றைக்கு ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் தினமும் மெரினாவை ரசித்து வருகிறார்கள்.

மெரினாவில் கிடைத்து வரும் இந்த வரவேற்பை தொடர்ந்து அடுத்தடுத்து பல்வேறு கடற்கரைகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான இந்த சிறப்பு பாதை அமைக்க மாற்றுத்திறனாளிகள் பலர் கோரிக்கைகளை முன் வைத்துள்ளார்கள்.

குறிப்பாக டிசம்பர் 3 இயக்கத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் சகோதரர் திரு.தீபக் நாதன் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். அதன்படி பெசன்ட்நகர் கடற்கரையிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பாதை அமைக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் அடிக்கல் நாட்டினார்கள். இதன்படி 1 கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக பாதை 189 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டு வருகின்றது. கிட்டத்தட்ட 40 சதவீத பணிகள் முடிவடைந்து விட்டன. இந்த பணியை வருகின்ற டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்து தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்பு மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளது. முழுவீச்சில் இந்த பணிகள் நடைபெற்று வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இங்கு நடைபெற்று வரும் பணிகளை நானும் சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையாளரும் ஆய்வு செய்துள்ளோம். இதனை விரைந்து முடித்து மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி இருக்கின்றோம்.

மேலும் பல கோரிக்கைகளை மாற்றுத்திறனாளிகள் முன் வைத்துள்ளார்கள். அதன்படி பெசன்ட் நகரை தொடர்ந்து திருவான்மியூர் கடற்கரையிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான இதேபோன்ற சிறப்பு பாதையை கழக அரசு விரைவில் அமைக்க உள்ளது.

சென்னை மட்டுமின்றி நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி கடற்கரையிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பாதை அமைக்கப்பட உள்ளது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு மாதத்தில் அந்த பணி ஆரம்பிக்கப்பட்டு நான்கைந்து மாதங்களில் நிறைவேற்றப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சென்னைப் பெருநகர மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் உள்பட அரசு உயர் அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.